இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 85 – ஒலி: 70 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 03 – செவ்வாய்க்கிழமை 20 அக்டோபர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 85 - Issue 70 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 03 - Tuesday 20 October 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

மழை வெள்ளம்: தண்ணீரில் தத்தளிக்கும் தலைநகர் சென்னை!

மக்களை மறந்த 'டம்மி' முதல்வர்!

சீனில் இல்லாத சி.எம்.!

கண்டுகொள்ளாத அமைச்சர்கள்!

சென்னை, அக்.20 -

சென்னையில் பெய்த கன மழையால் தலைநகர் சென்னை தண்ணீரில் தத்தளிக் கிறது. மக்களை மறந்த டம்மி முதல்வர், சீனில் இல்லை. வெள்ளம் வந்தாலும் வெளியே வரவில்லை. மக்களைப் பற்றி கவலைப்படாத அரசாக த.வெ.க. அரசு உள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், சென்னை யில் கனமழை கொட்டி தீர்த்தது.

அதிகபட்சமாக ஒரேநாளில் பாரிமுனை யில் 36 சென்டி மீட்டர் அளவுக்கு பெரு மழை வெளுத்து வாங்கியது. தமிழ்நாட் டில் வடகிழக்கு பருவமழை தொடங்கி தீவிரமடைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மழை கொட்டி தீர்த்து வருகிறது. இந்நிலையில், சென் னையில் பெருமழை பெய்தது. நுங்கம் பாக்கம், தேனாம்பேட்டை, ஆழ்வார் பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், திருவொற்றியூர், பெரம்பூர், கிண்டி, கோடம்பாக்கம், அசோக் நகர், தியாகராய நகர் உள்ளிட்ட நகரின் பல்வேறு இடங்களில் அதி கனமழை பெய்தது. மாலையில் பெய்ய தொடங்கிய மழை நள்ளிரவு வரை வெளுத்து வாங்கியது. இடி, மின்னல் மற்றும் சூறைக்காற் றுடன் அதிகனமழை கொட்டி தீர்த்தது.

வெள்ளக்காடாக காட்சியளித்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையம்!

சென்னை புறநகர் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வெள்ளக்காடாக காட்சி அளித்தது. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள ஜி.எஸ்.டி. சாலையில் கடுமையான வெள்ளப்பெ ருக்கு ஏற்பட்டு வாகனங்கள் நீரில் தத்த ளித்ததால், அப்பகுதியில் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியது. பேருந்து நிலையத்தின் வெளிப்பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில்



முழங்கால் அளவுக்கு மேல் தண்ணீர் தேங்கியதால் பயணிகள் மற்றும் பொது மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகினர். ஆயுதபூஜை மற்றும் தொடர் விடுமுறை யால் வெளியூர் செல்லும் ஆயிரக்கணக் கான மக்கள் இந்த மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர்.

போக்குவரத்து நெரிசல்!

நுங்கம்பாக்கத்தில் நேற்று பெய்த கன மழையால், அப்பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது. நுங்கம்பாக்கம் சுரங்கப் பாதையில் அதிகளவில் தண்ணீர் தேங்கி யது. பிரதான சாலைகளில் தேங்கியுள்ள தண்ணீரால் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டு, கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

உத்தமர் காந்தி சாலையில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக வளாகம் மழை நீர் வடியாமல் குளம்போல் தேங்கியது

மின்வெட்டால் மக்கள் தவிப்பு!

இதனிடையே, சென்னை நகரின் பல் வேறு பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது. கனமழையால் மக்கள் வீடுகளில் முடங் கியநிலையில் மின்வெட்டால் இருளில் தவித்தனர். சென்னையின் பல்வேறு பகுதிகளில் 5 மணி நேரத்துக்கும் மேலாக மின்வெட்டு நிலவியதால் பொதுமக்கள் அவதியடைந்தனர்.

மின்னகத்தை தொடர்பு கொண்டால் அழைப்பை அதிகாரிகள் ஏற்கவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். மின்வாரிய அதிகாரிகளின் தொலைபேசி எண்கள் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் வேதனை தெரிவித்தனர்.

வெளியில் வராத முதல்வர் – த.வெ.க. அமைச்சர்கள்!

சென்னையை கனமழை புரட்டி போட்ட நிலையில், த.வெ.க. அமைச்சர்கள் ஒருவர் கூட வெளியில் வந்து பாதிப்பை ஆய்வு செய்யாமல் வீடுகளில் முடங்கினர். இதனால் பொதுமக்கள் கடும் அதி ருப்தியடைந்தனர்.

முந்தைய தி.மு.க. ஆட்சியில் பருவமழை தொடங்குவதற்கு முன் பாகவே அனைத்து முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளும் முறை யாக, திட்டமிட்டு மேற் கொள்ளப்படும்.

இதனால் எந்த பாதிப்பும் ஏற்படாமல் பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டனர். எவ் வளவு மழை கொட்டி தீர்த்தாலும் நள்ளி ரவு என்றாலும் கூட அப்போதைய முதல மைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற் றும் தி.மு.க. அமைச்சர்கள், தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்கள், மேயர்கள், தி.மு.க. உள்ளாட்சி பிரதிநிதிகள் உள் ளிட்டோர் நேரடியாக களத்தில் இறங்கி ஆய்வுகளில் ஈடுபட்டு அதிகாரிகளுக்கு உடனுக்குடன் உத்தரவுகளை பிறப்பித்த னர். நள்ளிரவிலும் கொட்டும் மழையில் நனைந்தபடி அனைத்து தேவையான நிவாரணப் பணிகளையும் முடுக்கி விட்டனர்.

ஆனால் தற்போதைய த.வெ.க. ஆட்சியாளர்கள், சென்னையை கன மழை புரட்டி போட்டும், ஒருவர் கூட வெளியில் வந்து பாதிப்பை ஆய்வு செய்யாமல் வீடுகளில் முடங்கி கிடந்தனர். இதனால் பொதுமக்கள் கடும் அதிருப்தி யடைந்தனர். வாக்களித்த மக்களுக்கு சேவையாற்றவும், நிவாரணப் பணி களை முடுக்கி விடவும், தேங்கிய மழை நீரை அகற்றவும் ஒரு த.வெ.க. அமைச் சர் கூட நடவடிக்கை எடுக்கவில்லை.

சமூக ஆர்வலர்கள் கேள்வி!

முதலமைச்சர் விஜய் உட்பட த.வெ.க. அமைச்சர்கள், அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்களை மறந்து வீட்டில் உறங்கி கொண்டிருந்த தாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. வீட்டை விட்டு வெளியே வராத இவர்கள் தான் எதிர்வரும் மழையில் மக்களை காப்பாற்ற போகிறார்களா என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்நிலையில், மழைக்காலங்களில் முந்தைய தி.மு.க. ஆட்சியின் அபரிமித மான செயல்பாடுகள், அரவணைப்புகள், நிவாரணப் பணிகள் மக்களின் கண் முன்னே வந்து செல்வதாக பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, சென்னை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்றும் கன மழை முதல் மிக கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, அதிகாலை நேரத்தில் மேகக் கூட்டங்கள் கடல் பகுதிக்கு நகர்ந்ததால் தற்காலிக மாக மழை குறைந்திருந்தாலும், வளி மண்டல சுழற்சி காரணமாக, சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் இன்று மதியம் அல்லது மாலை மற்றும் இரவு நேரங்களில் மீண்டும் பலத்த இடி யுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுமக்களுக்கு போனில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மை இல்லாத டெண்டர் வெளியீடு! மேலும்

1,000 மெகாவாட் மின்சாரம் கூடுதல் விலைக்கு கொள்முதல்!

முன்கூட்டியே கணிக்கத் தவறிய சோஃபா மாடல் அரசு!

சென்னை, அக். 20 -

கூடுதல் விலைக்கு 4ஆயிரத்து 500 மெகாவாட் மின்சாரம் வாங்க டெண்டர் விட்ட நிலையில் மேலும் ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்ய தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் முடிவு செய்துள்ளது. இந்த டெண்டர்களில் வெளிப்படைத்தன்மை இல்லை என்ற குற்றச்சாட்டும் எழுந் துள்ளது.

தமிழகத்தில் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அக்டோபர் 12ம் தேதி முதல் 31ம் தேதி வரை 4,500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய டெண்டர் விடப்பட்டது.

இதில், மாலை நேர உச்சபட்சத் தேவைக்காகவும் மின்சாரம் வாங் கத் திட்டமிடப்பட்டது. சில ஒப்பந்தங்க ளில் மின்சாரத்தின் விலை ஒரு யூனிட்டுக்கு 37 ரூபாய் வரை நிர்ண யிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளி யானது.

இந்நிலையில், வரும் நவம்பர் 1ம் தேதி முதல் 2027ம் ஆண்டு மே 31ம் தேதி வரை தினமும் மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையி லான நேரத்தில் பயன்படுத்துவதற் காக மேலும் 1,000 மெகாவாட் மின் சாரம் கொள்முதல் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மாலை நேரங்களில் மின் பயன்பாடு அதிகரிப் பதும், அந்த நேரத்தில் சூரிய மின் உற்பத்தி கிடைக்காததும் கூடுதல் மின்சாரத் தேவைக்குக் காரணமா கக் கூறப்படுகிறது. இதற்காக வெளி மாநிலங்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள தனியார் மின் உற்பத்தியாளர் களிடம் இருந்து மின்சாரம் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்தக் கொள்முதலுக்கு ஒரு யூனிட்டுக்கு எவ்வளவு விலை நிர்ணயிக்கப்படும், 7 மாதங்களுக்கும் சேர்த்து எத்தனை கோடி ரூபாய் செல வாகும், ஏற்கனவே திட்டமிடப்பட்ட கொள்முதலுடன் சேர்த்து மொத்தச் செலவு எவ்வளவு என்பது குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

மின்சாரத்தை வாங்குவதற்காக செலவிடும் தொகை அதிகரித்தால், மின்வாரியத்தின் நிதிநிலை மோச டைய வாய்ப்புள்ளது.

இந்தச் செலவுகளைச் சமாளிக்க அரசு கூடுதல் நிதி ஒதுக்குமா? என்பது தெளிவாகவில்லை. மின் கொள்முதல் அதிக விலையில் மின்சாரம் வாங்கும் நிலை தொடர்ந்தால், மின்வாரியத் தின் நிதிச்சுமை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அதன் தாக்கம் எதிர்கால மின் கட்டண முடிவுகளில் பிரதிபலிக் குமா என்ற கவலை பொதுமக்களி டையே எழுந்துள்ளது.

அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி!

சென்னை, அக். 20 -

தமிழகத்தில் மழை விட்டு விளாசி வரும் நிலையில், வரும் நாட்களில் அதி கனமழைக்கு கூட வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

இன்று தென்மேற்கு வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் என்றும் இதனால் பருவமழை மேலும் தீவிரமடை யும் எனவும், குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டியுள்ள இடங்களில் மிக கனமழை முதல் அதி கனமழை வரை பெய்யக்கூடும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறி விப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

அதி கனமழை பெய்யக்கூடும் தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கி நல்ல மழை பெய்து வருகிறது. வரும் நாட்க ளில் தொடர்ந்து மேலும் மழை பெய்யும். தென்மேற்கு அரபிக் கடல் பகுதியில் வளிமண்டல சுழற்சி நிலவி வருகிறது.

இதன் காரணமாக இன்று (19 ஆம் தேதி திங்கட்கிழமை) புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு பகு தியால் தமிழ்நாட்டில் மேலும் பருவமழை தீவிரமடையும்.

குறிப்பாக தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகு திகளில் பருவமழை மேலும் தீவிரமடையும். அதாவது வரும் 19 ஆம் தேதிக்கு பிறகு கன மழை முதல் அதி கனமழை வரை பெய்யக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.